**செய்தி வெளியீடு எண்:230** **நாள்: 24.04.2017**

**<u>பொது நூலக இயக்ககத்தின் கீழ் செயல்படும் மாவட்ட ஆணைக்குழு நூலகங்களுக்கு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மூலம் பருவ இதழ்கள் வாங்கி வழங்குதல்</u>**

“**குறைந்த செலவில் சிறந்த நூலகச் சேவை**” என்ற நோக்கத்தின் அடிப்படையில் பொது நூலகத்துறை, சமூக வளர்ச்சியில் பங்கெடுப்பதோடு, நூலக இயக்கமானது பொது மக்களின் அறிவார்ந்த தேவையை ஈடுசெய்வதற்கேற்ற நாளிதழ்கள், பருவ இதழ்கள் மற்றும் தரமான புதிய நூல்களை வாங்கி வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருகிறது.

தற்போது பொது நூலக இயக்ககத்தால் சுமார் 446 தமிழ் பருவ இதழ்களும் மற்றும் சுமார் 165 ஆங்கில பருவ இதழ்களும் தேர்வுக் குழு உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்டு, மேற்படி அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் உள்ள பருவ இதழ்களில் அந்தந்த மாவட்டங்களில் வாசகர்களால் அதிக அளவில் பயன்படுத்தும் இதழ்கள் தேவைக்கேற்ப அந்தந்த மாவட்ட நூலக ஆணைக்குழுவின் நிதிநிலைமைக்கேற்ப வாங்கி வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தமிழக மாணவ மாணவியர்கள் பொது அறிவை வளர்க்கவும் மற்றும் குடிமைப்பணித் தேர்வு மூலம் வேலை வாய்ப்பைத் தேடும் இளைஞர்களுக்குப் பயன் தரும் வகையிலும், அனைத்து மாவட்ட நூலகங்களில் செயல்படும் குடிமைப்பணி கல்வி மையங்களை நாடி வரும் கிராமப்புற இளைஞர்களும் போட்டித் தேர்வில் பங்கேற்கச் செய்யும் வகையில், அந்த இளைஞர்களுக்கும், சமமான வாய்ப்பினை அளிக்கும் வகையில் தரமான ஆங்கில பருவ இதழ்களில் சிலவற்றை, எடுத்துக்காட்டாக **Economic & Political weekly, Time, Frontline, The Economist, Competition Refresher, G.K.Today, The Week, Business Today, Sports Star, India Today, Outlook, Civil Service Chronicle DataQuest, Science Reporter, Banking and You போன்ற ஆங்கில இதழ்கள்**, 32 மாவட்ட மைய நூலகங்களுக்கு

நூலகம் ஒன்றுக்கு 61 வகை இதழ்களும், 241 முழுநேர நூலகங்களுக்கு (குடிமைப்பணிப் பிரிவு செயல்படும் நூலகங்கள்) நூலகம் ஒன்றுக்கு 34 இதழ்களும் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பாக செயல்படும் 10 கிளை நூலகங்கள் வீதம் 320 நூலகங்களுக்கு நூலகம் ஒன்றுக்கு 19 இதழ்களும் தமிழ்நாடு பாடநூல் நிறுவன நிதியுதவி மூலமாக ரூ.2 கோடி மதிப்பில் நடப்பு ஆண்டு முதல் வாங்கி வழங்கவும் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் இதுபோன்றே தமிழ்நாடு பாடநூல் நிறுவன நிதியுதவி மூலம் வாங்குதற்கு ஏதுவாகவும் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தை இந்தியாவின் முதன்மையான அறிவுசார் மாநிலமாக மாற்ற வேண்டுமென்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய நோக்கினை நிறைவேற்றும் வண்ணம் முதன்முறையாக தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியல் பணிகள் கழக நிதியுதவியின் மூலம் மாவட்ட நூலகங்களுக்கு ஆங்கில பருவ இதழ்கள் வாங்கி வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

இதுமட்டுமின்றி அனைத்து நூலகங்களுக்கும் தரமான தமிழ் மற்றும் ஆங்கில பருவ இதழ்களை அந்தந்த மாவட்ட வாசகர்களின் தேவைக்கேற்பவும், நிதிநிலைமைக்கு ஏற்பவும் தொடர்ந்து வாங்கி வழங்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**